بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 25/08/2023 அன்று U.K - பைத்துல் ஃபு(த்)தூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபாரின் உண்மைத்துவம்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۞ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۞

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۞ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۞ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۞

அல்லாஹ் தன் அடியார்கள் செய்யும் இஸ்திஃக்ஃபார் (பாவமன்னிப்பு) மற்றும் தவ்பாவை ஏற்றுக் கொள்கிறான். ஆனால், அது உண்மையான தவ்பாவாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். வெறும் வாயால் சொற்கள் மட்டும் சொல்லப்படுவதாக இருக்கக் கூடாது. திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில், அல்லாஹ் உண்மையான தவ்பா செய்பவர்களுக்கு செல்வத்தையும் சந்ததிகளையும் வழங்குகின்றான். மேலும், இது இறை தண்டனையில் இருந்து தப்பிப்பதற்கு ஒரு வழியாகும் என்பது கூறப்பட்டுள்ளது. இஸ்திஃக்ஃபார் செய்பவர் அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பவர் ஆகிறார்.

அல்லாஹ் இஸ்திஃக்ஃபார் செய்பவர்களுக்கு நற்செய்தி வழங்கியவாறு ஓரிடத்தில் கூறுகிறான்: لَوَجَدُوا اللّٰهَ تَوَّابًا رَّحِيمًا பொருள்: நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வை அதிகம் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாகவும் மீண்டும் மீண்டும் கருணைபுரிபவனாகவும் காண்பார்கள். ஆனால், உண்மையான இஸ்திஃக்ஃபார் மற்றும் உண்மையான தவ்பா இருக்க வேண்டும் என்பதே நிபந்தனையாகும்.

ஒரு ஹதீஸில் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன்: பாவத்திலிருந்து உண்மையான தவ்பா செய்பவர் பாவமே செய்யாதவரைப் போன்றவராவார்.

அல்லாஹ் ஒரு மனிதரை நேசிக்கும்போது பாவங்கள் அவருக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. அதாவது, பாவத்தைத் தூண்டுபவை அவரைத் தீமையின் பக்கம் திருப்ப முடியாது. தீமையின் விளைவுகளில் இருந்து அல்லாஹ் அவரைப் பாதுகாத்து வைக்கின்றான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தவ்பாவின் அடையாளத்தை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: (தவறுக்கு) வெட்கப்பட்டு வருந்துதல் தவ்பாவின் அடையாளம் ஆகும்.

எனவே, உண்மையான தவ்பா செய்பவர் பாவங்களிலிருந்து தூய்மை அடையும் அதே வேளையில், அவருக்கு அல்லாஹ்வின் அன்பும் கிடைக்கிறது. அவர் மீண்டும் மீண்டும் அல்லாஹ்வின் கருணையிலிருந்து பங்குபெறுகிறார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையான தவ்பாவின் நிபந்தனைகள் தொடர்பாகக் கூறுகிறார்கள்: **முதல் நிபந்தனை,** தவறான எண்ணங்களையும் தீய சிந்தனைகளையும் விட்டுவிட வேண்டும். **இரண்டாவது நிபந்தனை,** உண்மையாக (தவறுக்கு) வெட்கப்பட்டு வருந்த வேண்டும். **மூன்றாவது நிபந்தனை,** அந்தத் தீமைகளுக்கு அருகில்கூட செல்ல மாட்டேன் என்று உறுதியான எண்ணம் கொள்ள வேண்டும்.

தீமைகளுக்கு அருகில் செல்ல மாட்டேன் என்று உறுதி எடுத்துக் கொண்டேன்; அதுவே போதுமானது என்ற அளவு மட்டுமே நின்று விடக்கூடாது. மாறாக, நல்லொழுக்கங்கள் மற்றும் தூய செயல்கள் அதன் இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆக, இதுதான் உண்மையான தவ்பா மற்றும் உண்மையாக தவறுக்கு வருந்துதல் ஆகும். இந்த நிலை ஏற்பட்டு விட்டால், பிறகு, அல்லாஹ் தன்னுடைய இத்தகைய அடியார்களை நேசிக்கின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்திஃக்ஃபார் மற்றும் தவ்பாவின் பக்கம் நமக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டுகிறார்கள். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு எந்த அளவுக்குக் கவலை இருந்தது என்றால், அன்னார் ஜமாஅத்திற்கு இதன்பால் கவனமூட்டிராத எந்த சந்தர்ப்பமும் இல்லை.

எனவே, அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்களின் ஒளியில் எடுத்துரைக்கப்பட்டுள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களை எப்பொழுதும் முன்னிறுத்தி அவற்றின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்வது நமக்கு மிக மிக அவசியமாகும். அப்போதுதான் நாம் பைஅத்துக்கான உரிமையை நிறைவேற்றக்கூடியவர்களாகவும் ஆக முடியும். நாம் நம்மிடம் தூய மாற்றத்தை உருவாக்கவில்லை என்றால், உண்மையான தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால், நாம் நம்மை சீர்திருத்திக்கொள்வதாக உறுதியெடுப்பது நமக்கு எந்தப் பலனையும் அளிக்காது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மனிதன் தன் இயல்பில் மிகவும் பலவீனமானவன் என்பதும், இறைவனின் நூற்றுக்கணக்கான கட்டளைகள் எனும் சுமை அவன் மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதும் வெளிப்படையான விஷயமாகும். மனிதன் தன் பலவீனம் காரணமாக சில கட்டளைகளை நிறைவேற்ற இயலாமல் இருப்பது அவனது இயல்பில் உள்ளது. சிலவேளை அதிகமாகக் கட்டளையிடக்கூடிய ஆன்மாவின் சில ஆசைகள் அவன் மீது மேலோங்கி விடுகின்றன. எனவே, அவன் ஏதேனும் தடுமாற்றத்தின் போது, தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் செய்தால், இறைவனின் கருணை அவனை அழிவதிலிருந்து காப்பாற்றி விடுகிறது. (ஏனெனில்) அவனுக்குத் தன் பலவீனம் மற்றும் இயல்பின் ரீதியில் இதற்கான உரிமை உள்ளது.

எனவே, இறைவன் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாக இல்லாமல் இருந்திருந்தால், நூற்றுக்கணக்கான கட்டளைகள் எனும் சுமை மனிதன் மீது ஒருபோதும் சுமத்தப்பட்டிருக்காது என்பது உறுதியான விஷயமாகும். இதிலிருந்து இறைவன் அதிகம் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாகவும், அதிகம் மன்னிப்பவனாகவும் இருக்கிறான் என்பது ஐயமின்றி நிரூபணமாகிறது. தவ்பா என்பதன் பொருள், மனிதன் இதற்குப் பிறகு தான் நெருப்பில் வீசப்பட்டாலும் சரி, இந்தத் தீமையை ஒருபோதும் செய்ய மாட்டான் என்ற உறுதி எடுத்தவாறு ஒரு தீமையை விட்டுவிடுவதாகும்.

ஆக, இது நிபந்தனையாகும். இத்தகைய தவ்பா செய்யப்பட வேண்டும். எனவே, மனிதன் இந்த உண்மைத்துவம் மற்றும் வலிமையான மனஉறுதியுடன் இறைவன் பக்கம் திரும்பும் போது இறைவன் தன் இயல்பில் பரிவுள்ளவனும் கருணையாளனும் ஆவான். அவன் அந்தப் பாவத்தின் தண்டனையை மன்னித்து விடுகிறான். தவ்பாவை ஏற்றுக் கொண்டு அழிவிலிருந்து காப்பாற்றி விடுவது இறைவனின் உயர்ப் பண்புகளில் ஒன்றாகும்.

பல மக்கள் நாங்கள் இத்தனை முறை இஸ்திஃக்ஃபார் செய்தோம்; நூறு அல்லது ஆயிரம் முறை தஸ்பீஹ் ஓதினோம் என்கிறார்கள். ஆனால், இஸ்திஃக்ஃபார் என்பதன் அர்த்தத்தை, பொருளைக் கேட்டால் திகைத்துப் போய் விடுவார்கள். மனிதன் உண்மையான முறையில், தன்னிடமிருந்து நிகழ்ந்து விட்ட அந்தக் குற்றங்கள் மற்றும் பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டி வரக்கூடாது என்று உள்ளத்துக்குள்ளேயே மன்னிப்புக் கோரிக் கொண்டிருக்க வேண்டும். மேலும், இனி நற்செயல் செய்ய நல்வாய்ப்பு வழங்குவாயாக, தீமையில் இருந்து பாதுகாத்து வைப்பாயாக என்று வருங்காலத்தில் உள்ளத்துக்குள்ளேயே எந்நேரமும் இறைவனிடம் உதவிக் கோரிக் கொண்டே இருக்க வேண்டும்.

சொற்களால் எந்த வேலையும் நடக்காது. இறைவன் முந்தைய பாவங்களை மன்னித்து விட வேண்டும் என்றும், இனி பாவங்களிலிருந்து பாதுகாத்து வைக்க வேண்டும் என்றும், நற்செயல் செய்ய நல்வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் தாய்மொழியிலும் இஸ்திஃக்ஃபார் செய்யலாம். உள்ளத்திலிருந்து எழுவதுதான் இறைவன் வரை சென்றடைகிறது. நாவோ உள்ளத்திற்கு சான்று மட்டுமே பகர்கிறது. வெறும் நாவளவிலான துஆக்கள் வீணானவையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நமது ஜமாஅத் ஏதாவது தனிச்சிறப்பான விஷயத்தைக் காட்டவும் வேண்டும். ஒருவர் பைஅத் செய்து செல்கிறார்; ஆனால், எந்தத் தனிச்சிறப்பான விஷயத்தையும் காட்டவில்லை என்றால், மனைவியுடன் முன்னர் நடந்து கொண்டது போன்றே நடந்து கொள்கிறார் என்றால், தமது குடும்பத்துடன், பிள்ளைகளுடன் முன்னரைப் போன்றே நடந்து கொள்கிறார் என்றால் இது நல்ல விஷயமல்ல.

பைஅத் செய்த பிறகும் அதே தீய ஒழுக்கமும், தீய முறையில் நடந்து கொள்வதும் இருக்கிறது என்றால், முன்பிருந்த அதே நிலை நீடித்தால், பிறகு,

பைஅத் செய்ததன் பலன் என்ன? பைஅத் செய்த பிறகு, அந்நியர்களுக்கும் தம்முடைய உறவினர்கள் மற்றும் அண்டை அயலாருக்கும்கூட எப்படிப்பட்ட முன்மாதிரியாகத் திகழ்ந்து காட்ட வேண்டும் என்றால், இப்போது இவர் முன்பிருந்தவர் அல்ல என்று அவர்கள் கூற வேண்டும். இதுவே உண்மையான இஸ்திஃக்ஃபார் செய்வதன் விளைவாக இருக்க வேண்டும்.

அறியாத பாதிரியார்கள் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த இஸ்திஃக்ஃபார் மீது ஆட்சேபனை செய்துள்ளனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்திஃக்ஃபார் செய்ததனால் அன்னார் குற்றம் புரிந்தவராக இருந்தார்கள் என்பது நிரூபணமாகிறது என்று எழுதப்பட்டுள்ளது - நவூதுபில்லாஹ். இஸ்திஃக்ஃபார் என்பதோ ஓர் உயர்ந்த பண்பாகும் என்பதை இந்த அறிவீனர்கள் புரிவதில்லை. மனிதன் இயல்பாகவே, பலவீனமும் ஆற்றல் குறைவும் தனது இயல்பின் தேட்டமாக இருக்கும் வண்ணம் உருவாகியுள்ளான்.

நபிமார்கள் இந்த இயல்பான ஆற்றல் குறைவும் மற்றும் மனித பலவீனத்தை நன்கு அறிவார்கள். எனவே, அவர்கள் இவ்வாறு துஆ செய்கிறார்கள்: இறைவா! அந்த மனித பலவீனங்கள் வெளிப்படாமலேயே போகும் வகையில், நீ எங்களைப் பாதுகாப்பாயாக! நான் எனது ஆற்றலால் பாவத்திலிருந்து தப்பிக்க முடியும் என்று எவரும் வாதிட முடியாது. எனவே, நபிமார்களும் பாதுகாப்பிற்காக இறைவனின் தேவையுடையவர்கள் ஆவார்கள். எனவே, அடியார் என்பதை வெளிப்படுத்துவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஏனைய நபிமார்களைப் போன்று தமது பாதுகாப்பை அல்லாஹ்விடம் வேண்டி வந்தார்கள்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இஸ்திஃக்ஃபார் செய்து வரவில்லை என்ற கிறிஸ்தவர்களின் எண்ணம் தவறானது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஆங்காங்கே தம்முடைய பலவீனங்களை ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்பதும் இஸ்திஃக்ஃபாரும் செய்துள்ளார்கள் என்பதும் இஞ்சீலில் இருந்து தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: சரி! ஏலீ ஏலீ லிமா ஸபக்தானீ (என் இறைவா! என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டாய்) என்பதன் பொருள் என்ன என்று கூறுங்களேன். அபீ அபீ (என் தந்தையே! என் தந்தையே!) என்று ஏன் அழைக்கவில்லை? எபிரேய மொழியில் 'ஏல்' எனும் சொல் இறைவனுக்காகக் கூறப்படுகிறது. இதற்கு, 'கருணை புரிவாயாக, அருள் புரிவாயாக, என்னை இவ்வாறு உதவியற்றவனாக விட்டு விடாதிருப்பாயாக, அதாவது, என்னைப் பாதுகாப்பாயாக' என்பதே பொருள் ஆகும்.

ஹதீஸில் வருகிறது, மனிதன் இறைவனை நோக்கி ஒரு சாண் அளவுக்கு சென்றால், இறைவன் அவன் பக்கம் ஒரு முழம் அளவுக்கு வருகின்றான். மனிதன் நடந்து சென்றால், இறைவன் ஓடி வருகிறான். அதாவது, மனிதன் இறைவன் பக்கம் கவனம் செலுத்தினால், அல்லாஹ்வும் கருணை, அருள் மற்றும் பாவமன்னிப்பு ஆகியவற்றில் அளவற்ற முறையில் அவன் மீது அருள்பாலிக்கின்றான். ஆனால், இறைவனை விட்டு முகந்திருப்பிக் கொண்டு அமர்ந்து விட்டால், இறைவன் ஏன் பொருட்படுத்த வேண்டும்?

திருக்குர்ஆன் அல்லாஹ்வின் இரண்டு பெயர்களை முன் வைத்துள்ளது. அல் ஹய்யூ மற்றும் அல் கய்யூம். அல் ஹய்யூ என்பதன் பொருள், அல்லாஹ் உயிருள்ளவனும் மற்றவர்களுக்கு வாழ்வளிப்பவனும் ஆவான் என்பதாகும். அல் கய்யூம் என்பதன் பொருள், தான் நிலைத்திருப்பவனும் மற்றவர்கள் நிலைத்திருப்பதற்கான உண்மைக் காரணமும் ஆவான் என்பதாகும். ஒவ்வொன்றின் அக, புற நிலைத்திருத்தல் மற்றும் வாழ்வு இவ்விரு பண்புகள் மூலமே இருக்கின்றன.

எனவே, ஹய்யு என்ற சொல் அவன் வணங்கப்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது. இது சூரா ஃபாத்திஹாவில் إِيَّاكَ نَعْبُدُ என்பதன் மூலம் வெளிப்படுகிறது. அல் கய்யூம் எனும் சொல் அவனிடம் உதவி தேடப்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது. இது إِيَّاكَ نَسْتَعِيْنُ எனும் சொல்லால் நிறைவேற்றப்பட்டுள்ளது. மனிதனுக்கு இறைவனின் தேவை எந்நேரமும் இணைந்திருக்கிறது. எனவே, இறைவனிடம் ஆற்றலை வேண்டிக் கொண்டே இருக்க வேண்டியது அவசியமாகிறது. இதுவே உண்மையான இஸ்திஃக்ஃபார் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நற்செயல்கள் மற்றும் இறைவணக்கத்தில் ஆர்வமும் ஈடுபாடும் தன் புறமிருந்து உருவாக முடியாது. இது இறைவனின் அருள் மற்றும் (அவன் தரும்) நல்வாய்ப்பினால் கிடைக்கிறது. அதற்கு மனிதன் பதற்றம் அடையாமல் இருப்பதும், இறைவனிடம் அவனது நல்வாய்ப்பு மற்றும் அருளுக்காக துஆக்கள் செய்து கொண்டே இருப்பதும் அவசியமாகும். இறைவணக்கத்திற்கான ஆர்வத்தையும் ஈடுபாட்டையுமே அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். மேலும், அந்த துஆக்களில் களைப்படைந்து விடக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நன்றாக நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வை விட்டுவிட்டு மருந்து மற்றும் திட்டங்களை நம்பியிருப்பது முட்டாள்தனமாகும். உங்கள் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால், புதிய வாழ்வு இஸ்திஃக்ஃபார் உடைய வாழ்வு என்பது தெரிய வர வேண்டும். இஸ்திஃக்ஃபார் அதிகமாக செய்யுங்கள்.

எவர்களுக்கு உலகில் அதிகமாக மூழ்கியிருப்பதன் காரணமாக குறைவான நேரம் கிடைக்கிறதோ அவர்கள் எல்லாரையும் விட அதிகம் அஞ்ச வேண்டும். ஊழியம் செய்யும் மக்களுக்குப் பெரும்பாலான இறை கட்டளைகள் விடுபட்டுப் போகின்றன. எனவே, நிர்பந்தமான சூழ்நிலையில் லுஹர், அஸ்ர் மற்றும் மஃக்ரிப், இஷா தொழுகைகளை சேர்த்து தொழுது கொள்வது ஆகுமானது. மிகவும் நிர்பந்தமான சூழல் என்றால், சேர்த்து தொழுது கொள்ளுங்கள். ஆனால், தொழுகைகளை அவற்றிற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவதுதான் அசல் விஷயமாகும். அல்லாஹ்வுக்கான உரிமை மற்றும் அடியார்களுக்கான

உரிமையை செலுத்துவதில் அநீதியிழைக்காதீர்கள்; வரம்பு மீறாதீர்கள். உங்களுடைய கடமையை மிகவும் நேர்மையுடன் நிறைவேற்றுங்கள்.

எனவே, அடிப்படை கட்டளைகளையும் முன்னிறுத்தி அவற்றை சரியாகப் பின்பற்றும் போதுதான் இஸ்திஃக்ஃபார் மற்றும் தவ்பா செய்வதற்குப் பயன் இருக்கும். தொழுகைகளை முறையாக நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ்வுக்கான உரிமை மற்றும் அடியார்களுக்கான உரிமை ஆகியவற்றையும் சரியாக நிறைவேற்ற வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: தவ்பா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று கூறாதீர்கள். நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் உங்களுடைய அமல்களால் ஒருபோதும் தப்பிக்க முடியாது. எப்பொழுதும் அருள் காப்பாற்றுகிறது; அமல்கள் அல்ல. பிறகு, கூறினார்கள்: பரிவுள்ளவனும் கருணையாளனுமான இறைவா! எங்கள் அனைவர் மீதும் அருள் புரிவாயாக! நாங்கள் உன் அடியார்கள் ஆவோம். உன் வாயிற்படியில் விழுந்து கிடக்கிறோம்.

அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக! நாம் தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் உடைய உண்மையான பொருளைப் புரிந்தவாறு, இஸ்திஃக்ஃபார் உடைய உண்மைத்துவத்தைப் புரிந்தவாறு இஸ்திஃக்ஃபார் மற்றும் தவ்பா செய்யக்கூடியவர்களாக இருப்போமாக!

*ஜுமுஆ குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நான்கு மர்ஹூம்களைப் பற்றியும் அவர்கள் செய்த ஜமாஅத் தொண்டுகளைப் பற்றியும் எடுத்துரைத்தார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, அந்த மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுகை தொழவைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**